Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 4, 2024

புதன்கிழமை டிசெம்பர் 04, 2024 | ஒளி: 10 கதிர்: 107 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## உ/த பரீட்சைகள் மீண்டும் ஆரம்பம்

சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 2024 க.பொ.த உயர்தர (உ/த) பரீட்சைகள் புதன்கிழமை (04) மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நவம்பர் 27ஆம் திகதி முதல் 6 நாட்களுக்கு பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன. திருத்தப்பட்ட கால அட்டவணையின்படி, முதலில் டிசம்பர் 4 ஆம் திகதி பாடங்கள் திட்டமிட்டபடி நடத்தப்படும்.

தொடர்ச்சி P2

## “இனவாதத்தை தூண்டிவிட முயற்சி”



அரசியலில் தோல்வியடைந்துள்ளவர்கள் இனவாதத்தை மீண்டும் தூண்டிவிட முயற்சிக்கிறார்கள். இனவாத செயற்பாடுகளை தோற்கடிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் .அரசியலுக்காக மக்களையும் மாகாணங்களையும், வேறுபடுத்திய காலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “அடையாளத்தோடு வாழ விரும்புகிறோம்”



நாங்களும் நீங்களும் தேசத்தில் ஒன்றாக இருந்தாலும் இரண்டுபட்ட தேசங்களுக்குறிய இரண்டுபட்ட இனக்குழுமங்கள் என்ற அடையாளத்துடன் வாழ்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்து வரலாற்று சிந்தனைகளை கைவிட்டு 21 ஆம் நூற்றாண்டிற்குரிய நவீன சிந்தனையின் படி இனப்பிரச்சினையை அணுக வேண்டும். சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமையாளர்களும் இணைப் பங்காளர்களும் என்ற மனப்பாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசு தயாராக வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்.

தொடர்ச்சி P2



## முகம்மது சாலி நழீம் பதவிப்பிரமாணம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியல் எம்.பி.யாக முகம்மது சாலி நழீம் சபாநாயகர் அசோக ரன்வல முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (03) பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர்

தொடர்ச்சி P2

## எரிவாயு விலையில் இன்று திருத்தம்




மாதாந்த எரிவாயு விலை திருத்தத்தின் படி டிசம்பர் மாத விலை திருத்தம் புதன்கிழமை (04) அறிவிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் தற்போது நிலவும் எரிவாயு விலையுடன் ஒப்பிட்டு இந்த ஆண்டு எரிவாயுவின் விலை திருத்தம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதாகவும், அதற்கேற்ப இந்த நாட்டில் எரிவாயு விலையில் அதிகரிப்பு ஏற்பட வேண்டும். ஆனால், மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன், எரிவாயுவின் விலையை ஸ்திரமான நிலையில் பேணுவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்த

## “ஒருபோதும் இடமளிக்க முடியாது”



தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தும் வகையில் ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். இவ்வாறானவர்கள் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### பொலிஸ் ஊடகப் பேச்சாளராக

## புத்திக மனதுங்க நியமனம்



தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், 02.12.2024 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரால், பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளராக, பொலிஸ் ஊடகப் பேச்சாளராக,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டமானி புத்திக மனதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

01.01.2014 ஆம் திகதியன்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து, 01.01.2020 ஆம் திகதி பொலிஸ் அத்தியட்சகராகவும், 01.01.2024 ஆம் திகதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்த்தப்பட்டார்.

தொடர்ச்சி P2

## “ஊடக அடக்கு முறையில் ஈடுபடுவதை ஏற்கமுடியாது”



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு இந்தச் சட்டத்தை பயன்படுத்தி பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகளைப் பறித்து வருகிறது.பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி ஊடக அடக்கு முறைகளில் ஈடுபடுவதை ஏற்கமுடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தொடர்ச்சி P2

## இரவு 9.30 வரை இன்றைய அமர்வு

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நிலவிய மோசமான காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை புதன்கிழமை (04) மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை நடத்துவதற்கு சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி, ஜனாதிபதி யினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட

தொடர்ச்சி P2

## மாணவர்களுக்கு 6,000 ரூபாய்



ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை தவணை காலப்பகுதியில் 6000 ரூபாய் விசேட கொடுப்பனவு அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படும். அத்துடன் அஸ்வெசும நலன்புரி திட்ட பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் வழங்கும் காலத்தை மேலும் நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

தொடர்ச்சி P2


## ஆறுதல் அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிப்பு

ஆறுதல் (அஸ்வெசும) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு முறைமை 2023.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 2384/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு 2024.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 36 வருடங்களுக்கு பின் வீதி ஒப்படைப்பு

எஸ்.கீதபொன்கலன்



திருகோணமலை உவர்மலை வாழை முனை( Plantan Point) கீழ் சுற்றுவட்ட வீதி 36 வருடங்களுக்குப் பின்னர் மக்களின் பாவனைக்காக இராணுவத்தினரால் ஞாயிற்றுக்கிழமை (01) திறந்து வைக்கப்பட்டது. பிரித்தானியரின் ஆட்சியின் போது,திருகோணமலை உற்துறைமுகத்தின் பாதுகாப்பிற்கென இயற்கையான கேந்திர தானமான இவ் முனைப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

சுதந்திரத்தின் பின்னர் தொடர்ந்தும் இலங்கை இராணுவத்தின் முகாம் இவ்விடத்தில் இயங்கி வருகின்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “இனவாதத்தை தூண்டிவிட முயற்சி”

சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தி மக்கள் உருவாக்கிய அரசாங்கத்தின் பொறுப்பையே ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் முன்வைத்துள்ளார். மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு.ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு மூலம் மக்கள் ஊழல் அரசியல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்கள்.அத்துடன் ஊழல்மிக்க அரசியல்வாதிகளையும் மக்கள் புறக்கணித்துள்ளார்கள்.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து புதிய அரசாங்கத்தை மக்களாணையுடன்நாம் அமைத்துள்ளோம். அதிகாரத்தை சிறந்த முறையில் மக்களாட்சிக்கு அமைய செயற்படுத்தும் பொறுப்பு அரசுக்கு ண்டு. மக்களின் எதிர்பார்த்தை சிறந்த முறையில் நாங்கள் நிறைவேற்றுவோம்.

அதேவேளை புதிய அரசியல்



மாற்றத்துடன் மக்கள் இனவாதத்தை புறக்கணி த்துள்ளார்கள். அரசியலில் தோல்வியடைந்துள்ளவர்கள் மீண்டும் இனவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள். இனவாத செயற்பாடுகளை தோற்கடிக்க கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் . அரசியலுக்காக மாகாணங்களையும், மக்களையும் வேறப்படுத்திய காலம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்குவதற்கு இனி இடமளிக்க போவதில்லை. அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்கும் வரலாற்று சிறப்பு மிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நாங்கள் மலினப்படுத்த போவதில்லை.

நாட்டை நாம் பொறுப்பேற்கும் போது நாட்டில் பொலிஸ்மா அதிபர் இருக்கவில்லை. அமைச்சரவையின் தீர்மானத்தை உயர்நீதிமன்றம் புறக்கணித்த நாட்டையும், அரசாங்கத்தின் தீர்மானத்தை ஆணைக்குழு புறக்கணித்த நாட்டையுமே நாம் பொறுப்பேற்றோம். பொருளாதாரம், சமூகம் , அரசியல் உட்பட அனைத்து துறைகளிலும் வீழ்ச்சியடைந்த நாட்டையே நாங்கள் பொறுப்பேற்றுள்ளோம் என்றார்.

# “அடையாளத்தோடு...

மாவட்ட எம்.பி.யான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் பல விஷயங்களை சொல்லியிருந்தாலும் 80 வருடங்களாக இந்த மண்ணில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தொடர்பில் அவர் ஒரு வார்த்தை கூட பேசாது விட்டது,அவரின் உரையில் தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சி என்பது மிக முக்கியமான விடயம் என்பது பேசப்படாமல் போனது துரதிர்ஷ்டமானது.

இதே பாராளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ச தனது கொள்கைப் பிரகடன உரையிலும் அதற்கு பின்னர் அவர் இந்தியா சென்றபோது இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும் இந்த நாட்டில் உள்ள பிரச்சினை தொடர்பில்,தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு வார்த்தைகளையும் பேசாது தவிர்த்து சென்றிருந்தார். அந்த தவிர்ப்பு என்பது இந்த நாட்டில் அவரை அடையாளம் தெரியாமல் ஆக்கி வைத்துள்ளது என்ற வரலாற்றை நீங்கள் ஒரு முறை திரும்பிப்பார்க்க வேண்டும் .

இன்று உங்களிடம் 159 ஆசனங்கள் என்ற பெரும்பான்மை பலம் உள்ள சக்தியாக நீங்கள் உருவெடுத்து உள்ளீர்கள் .அதை நாங்கள் பாராட்டுகிறோம். நாங்கள் இரத்தமும் சதையுமாக கண்ணீரோடு வாழ்ந்த இனம். சிங்கள சகோதரர்களால் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட யுத்தத்தினால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்ட இனம். இன்றும் விடுவிக்கப்படாத காணிகள்,ஆகாது முகாம்கள்,எங்களின் வாழ்க்கை முறையில் எல்லாம் நாங்கள் தத்தளித்தோம் கொண்டிருக்கின்ற இனமாக உள்ளோம்.இந்த நிலையில் கூட உங்களோடு எமது கரங்களை சேர்த்து பயணிக்க விரும்புகின்றோம். உங்களின் பலமான மாற்றங்களோடு தமிழ் மக்கள் தமது மாற்றங்களை நோக்கி நகரவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நாங்கள் எதற்கும் எதிராளிகள் அல்ல. நாங்கள் பல் காலங்களில் பல் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். ஆனால் பேச்சுக்கள், உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன .எழுதப்பட்டுள்ள ஒப்பந்த கள் எல்லாம் ஒன்றில் கிழித்தெறிய பட்டுள்ளன.அல்லது அவர் 13 ஆவது திருத்தத்தைப் போல் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன. இன்று மாற்றம் வந்துள்ளது .எதையும் செய்யக்கூடிய வல்லமையுடன் வந்துள்ளீர்கள். நாங்கள் நீண்ட காலமாக போராடி கிட்டத்தட்ட 4 இலட்சம் தமிழ் மக்கள் இறந்தார்கள் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்கள் இந்த மண்ணில் விதைக்கப்பட்டு உள்ளார்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் இழந்தும் நம்பிக்கையோடு நிமிர்ந்து நிற்கின்ற இனம் உங்களோடு கைகோர்க்கத் தயார் என்று இன்றும் எங்களுடைய சமாதானக் கதவுகளைத் திறந்து உங்களுடன் நாங்கள் பேசுகிறோம். காரணம் இந்த நாட்டில் நீங்கள் நீங்களாகவும் நாங்கள் நாங்களாகவும் எங்களின் உரித்துக்களோடு வாழவேண்டும் என்ற உன்னதமான எண்ணங்களோடு உயர்ந்த குணங்களோடும் உங்களோடு கரம் கோர்க்க நாங்கள் தயார்.

சிங்கள மக்களின் தேசிய அடையாளங்கள் ,உங்களின் இன ,மத கலாசார அடையாளங்களை ,நில. மொழி அடையாளங்களை நாம் மதிக்கிறோம். இது ஒரு இனத்துக்குரியது. அதேபோல் இந்த மண்ணில் 21 ஆம் நூற்றாண்டின் காலத்திற்கு நீங்கள் வருவதென்றால் இப்போதுள்ள காலச்சூழலில் எவ்வாறான விடயங்களை கையாள வேண்டும். எவ்வாறு அரசியல் மாற்றங்களை நோக்கி நகர வேண்டும் எனபதில் உங்களின் கரிசனையை ,எண்ணங்களை நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார்.

# முகம்மது சாலி நழீம்...

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

கடந்த 22 ஆம் திகதி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் தேசியப்பட்டியல் எம்.பி.யாக முகம்மது சாலி நழீம் பெயரை தேர்தல்கள்ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டது. அதற்கமைய அவர் பத்தாவது பாராளுமன்றத்தின் எம்.பி.யாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

# “ஒருபோதும் இடமளிக்க முடியாது”

பாராளும ன்றத்தில் செவ்வாய்க்கிழமை(03) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு துறைகளில் காணப்படும் அடிப்படை பிரச்சினை களுக்கு தீர்வு காண்போம் . தூதுவர் நியமனம் மற்றும் இராஜதந்திர நியமனத்தில் காணப்படும் முறைகேடுகள் ஆராயப்படும். வெளிநாட்டு நிய மனங்களை முற்றாக மறுசீரமைக்க உள்ளோம். வெளிநாட்டு தொழில் வாய்ப்பு விவகாரத்தில் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. கடந்த அரசாங்கத்தின் ஒரு சில தீர்மானங்களால் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. இவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது .

ஜனாதிபதி,பாராளுமன்ற தேர்தல் வெற்றியுடன் நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தும் வகையில் ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். தேசிய ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றியுடன் தேசிய ஒருமைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பாரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாரம்பரியமான அரசியல் தரப்பினரை புறக்கணித்து எம்மக்கள் புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்களின் எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றார்.

# 36 வருடங்களுக்கு...

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த உவர்மலையின் பின்பகுதியான இவ் சுற்றுவட்ட வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளமையின் மூலம் உவர்மலை மத்திய வீதியினூடாக செல்கின்ற மக்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகம் அமைந்துள்ள உவர்மலை கீழ் வீதியினூடாக திரும்பி வரமுடியும்.

இவ்வீதி சுமார் 36 வருடங்களுக்குப் பின்னர் மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டு மக்களின் பயணம் இலகுவாக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியானது 1988 ஆம் ஆண்டு மூடப்படும் வரை நகர பாடசாலை மாணவர்களுக்கான பேரூந்து சேவை ஒன்று இவ் வீதி ஊடாக நடைபெற்று வந்தது.

இப்பகுதிக்குச் சென்று திருகோணமலையின் மற்றுமொரு இயற்கை அழகை இரசிக்க முடியும்.முனைப்பகுதியில் இருந்து மிக அண்மித்த தூரத்தில் அமைந்துள்ள பிறீமா மா ஆலை தொழிற்சாலை,டோக்கியோ சீமேந்து தொழிற்சாலை என்பவற்றை காண முடியும்.அத்துடன் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள் இராணுவ அருங்காட்சியகத்தையும் பார்வையிடலாம்.

அத்துடன் 22ஆம் படைப்பிரிவு அமைந்துள்ள வீதியூடான சுற்றுவட்ட வீதியை திறப்பதற்கான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகவும்,எதிர்வரும் இரண்டு மாதகாலத்திற்குள் அவ்வீதியும் மக்களின் பாவனைக்காக திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வீதியும் திறக்கப்படுமானால் உவர்மலையில் உள்ள அனைத்து கரையோரமான வீதிகளினூடாவும் சுற்றி வருகின்ற வாய்ப்பு இப்பகுதி மக்களுக்கு கிடைக்கும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற நல்லிணக்க செயற்பாடுகளில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது.

# உ/த பரீட்சைகள்...

வேதியியல் முதல் தாள், தொழில்நுட்ப அறிவியல் முதல் தாள் மற்றும் நாடகம் முதல் தாள் (மூன்று மொழிகளில்) காலையிலும், அரசியல் அறிவியல் முதல் தாள் பிற்பகலும் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட கால அட்டவணைகளை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு டிசம்பர் 24, 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் பரீட்சைகள் நடைபெறாது. இந்த நாட்களில் அனைத்து பரீட்சை மத்திய நிலையங்களும் மூடப்படும்.

வினாத்தாள்கள் தொடர்பாக, அனைத்து வினாத்தாள்களையும் நிலையங்களில் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணையாளர் நாயகம் உறுதியளித்தார்.

# “ஊடக அடக்கு முறையில்...

தேர்தல் மேடைகளில் தற்போதைய அரசாங்கம் சொன்னதைச் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. இவ்வாறு நீங்கள் கூறிய விடயங்களைச் செய்யும் போது அது மக்கள் சார்பாக, மக்களுக்கு சாதகமாக அமைந்தால் எதிர்க்கட்சியின் ஆதரவை அதற்குப் பெற்றுத் தருவோம்.

தற்போதைய அரசாங்கம், தேர்தல் மேடைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவோம் எனக் கூறியது. ஆனால் அந்தச் சட்டத்தை பயன்படுத்தி பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் சிவில் உரிமைகளை பறிக்கும் வகையில் தற்போது பயன்படுத்தி வருகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி ஊடக அடக்குமுறையில் ஈடுபடுவது நியாயமான செயலல்ல. தற்போதைய அரசாங்கம் பெரும் மக்கள் ஆணையைப் பெறுவதற்கு சமூக ஊடகத் துறையின் கூடிய ஆதரவு கிடைத்தது. தற்போது நீக்குவோம் என சொல்லப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி சமூக ஊடக ஆர்வலர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றனர். சொன்னதை செய்யும் அரசாங்கமாக இருந்தால் இந்த அடக்குமுறையை நிறுத்த வேண்டும்.

அரசாங்கம் நீக்குவதாக கூறிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சமூக வலைதள ஆர்வலர்களை கைது செய்தாலும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்களை அவ்வாறு கைது செய்ய முடியாது என நீதிபதிகள் கூட கூறியுள்ளனர். அவ்வாறே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் யாரையெல்லாம் கைது செய்யலாம் என்பது குறித்தும் இந்த அரசாங்கத்துக்கு அவர்கள் பாடமும் புகட்டியுள்ளனர்.

இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் 50வீத பங்களிப்பை வழங்கி வருகின்றனர். டிசம்பர் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்ட பரேட்டே சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படவுள்ளது. இதை மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு நீடித்து, இந்த தொழில் முயற்சியான்மையாளர் கள் தமது வியாபார நடவடிக்கைகளில் தலைதூக்க மூலதன ரீதியாக பக்க பலத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். குறைந்த வட்டி விகிதத்தில் மூலதனம் வழங்கப்பட வேண்டும். கடனை ஒரளவேனும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

நாட்டில் அண்மைக் காலமாக நிலவி வரும் மோசமான காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக, 5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவசர வேலை திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின்படி, அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையை கூட்டுங்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன், புதிய வானிலை தகவல்களை பெறுவதற்கு நவீன தொழில்நுட்ப கட்டமைப்புகளை நிறுவ வேண்டும். உலக வங்கியும், ஜப்பானும் இதற்கான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்க தயாராக உள்ளன. எனவே இவற்றை பெற வேண்டும். அத்துடன் பயிர் சேதத்தினால் நாட்டின் உணவு கட்டமைப்புக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

# புத்திக மனதுங்க...

திருகோணமலை, வவுனியா ஆகிய பிரிவுகளில், பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழு பிரிவின் பணிப்பாளராக , பொலிஸ் ஊடகப் பிரிவு மற்றும் பொது மக்கள் நட்புறவுப் பிரிவின் பதில் பணிப்பாளராகவும், சட்டப் பிரிவின் உதவிப் பணிப்பாளராகவும் மற்றும் கந்தளாய் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்கு பொறுப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு ஆனந்த வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இளங்கலை பட்டமும், விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளதுடன் இவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டாமானிப் பட்டமும் பெற்றுள்ளார்.

இவர், பொலிஸ் சேவை தொடர்பாக தேசிய பயிற்சிகள் கல்விக்கு மேலதிகமாக, ரஷ்யா, தாய்லாந்து. பிலிப்பைன்ஸ் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளில் பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.

# இரவு 9.30 வரை...

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான விவாதம் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பான வாக்கெடுப்பு மாலை 5. மணிக்கு இடம்பெறும். வாக்கெடுப்பு முடிவடைந்ததும் மாலை 5.30 மணிக்கு எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் அனர்த்த நிலைமைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை இரவு 9.30 மணிவரை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கு...

ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை தவணை காலப்பகுதியில் 6000 ரூபாய் விசேட கொடுப்பனவு அடுத்த ஆண்டு முதல் வழங்கப்படும். அத்துடன் அஸ்வெசும நலன்புரி திட்ட பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்கவும் வழங்கும் காலத்தை மேலும் நீடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்ப ட்டுள்ளது என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் செவ்வா ய்க்கிழமை (03) இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை மீதான வி வாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்தார்.

# ஆறுதல் அஸ்வெசும

குறித்த உத்தேச திட்டத்தின் கீழ் ஆறுதல் (அஸ்வெசும) நலன்புரிப் பயனாளிகள் குடும்பங்கள் 04 வகையான சமூகப் பிரிவின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வறியவர்கள் மற்றும் மிகவும் வறியவர்கள் சமூகப் பிரிவினருக்கு தற்போது வழங்கப்படுகின்ற மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவுத் தொகை முறையாக 8500 ரூபாவை 10,000 ரூபாய் வரைக்கும், 15,000 ரூபாவை 17,500 ரூபாவாகவும் அதிகரிப்பதற்கும் மற்றும் அதற்கிணங்க திருத்தப்பட்ட ஆறுதல் (அஸ்வெசும) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உத்தேச திட்டத்தை பாராளுமன்றம் அங்கீகரிக்கின்ற நாள் தொடக்கம் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலையற்றவர்கள் எனும் சமூகப் பிரிவினருக்கான நலன்புரிக் கொடுப்பனவு செலுத்தப்படும் காலப்பகுதியை 2025.03.31 வரைக்கும் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல்

ஆபத்துக்கு உட்பட்ட சமூகப் பிரிவினருக்காக கொடுப்பனவுக் காலத்தை 2025.12.31 வரைக்கும் செல்லுபடியாகும் காலத்தை நீடித்தல் ஆகியனவாகும்.







## பட்டமளிப்பு விழா

ஐடிஎம் நேஷனல் கேம்பஸ் இன்டர்நேஷனலின் (IDMNC) வருடாந்த பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) சனிக்கிழமை (30) இடம்பெற்றது.
IDMNC இன்டர்நேஷனல் கேம்பஸின் தலைவர் கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தியின் வழிகாட்டுதலின் கீழ், இவ்விழாவில் 750 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கௌரவிக்கப்பட்டனர். சட்டத்துறை உட்பட பல்வேறு துறைகளில் இளமானி மற்றும் முதுமானி பட்டங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பிரதம அதிதியாக, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவர் மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மூத்த பேராசிரியர் சுதந்த லியனகே கலந்து கொண்டார். விருந்தினராக பேராசிரியர் சாரா வில்லியம்ஸ், பக்கிங்ஹம்ஷைர் நியூ யுனிவர்சிட்டியின் வணிக மற்றும் சட்டப்பீடத்தின் தலைவர் மற்றும் பல்கலைக்கழக கூட்டாண்மைகளின் தலைவர், நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அதோடு, மிஸ்டர் மைக் மெக்டெர்மோட், டாக்டர் டெனிஸ் கைட், பேராசிரியர் ஸைனி பேய், பேராசிரியர் சுக்விந்தர் பனேசர் மற்றும் மிஸ்டர் அலன் கிளார்க் போன்ற பல உயரிய கௌரவமானோரின் பங்களிப்பும் விருந்தினராக அமைந்தது.
IDMNC இன்டர்நேஷனல் கேம்பஸ், பக்கிங்ஹம்ஷைர் நியூ யூனிவர்சிட்டி உள்ளிட்ட பல உலகப்பிரசித்தியான கல்வி நிறுவனங்களுடன் இணைந்து சிறந்த கல்வியை வழங்கும் திறனுடன் விளங்குகிறது. செயற்கை நுட்ப கல்வி, மேலாண்மை, ஆசிரியர் கல்வி மற்றும் சட்டக் கல்வி போன்ற பல துறைகளில் மாணவர்களுக்கு UGC அங்கீகாரம் பெற்ற பட்டங்களை வழங்குகிறது. 40 ஆண்டு களுக்கும் மேலாக,IDMNC இன்டர்நேஷனல், இலங்கையின் உயர் கல்வி துறையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது. கல்வியில் சர்வதேச தரங்களை பின்பற்றுவதுடன், உலகளாவிய திறன் வளங்களை மாணவர்களுக்கு வழங்கியது அதன் சிறப்பாக அமைந்துள்ளது.







### உழவு இயந்திரம் விபத்து

# “சுயாதீன விசாரணை வேண்டும்”

காரைதீவு - மாவடிப்பள்ளி வீதியில், உழவு இயந்திரம் கவிழ்ந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட 8 பேர் உயிரிழந்த சம்பவம், தொடர்பில் சுயாதீனமான விசாரணையை நடத்த வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் செவ்வாய்க்கிழமை (03) சபையில் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், “அம்பாறை மாவட்டத்தில், மாவடிப்பள்ளியில் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களது வீடுகளுக்கு நான் விஜயம் செய்திருந்தேன். அப்போது, உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பொலிஸாரின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இந்தத் துயர சம்பவம் நிகழ்ந்ததாக குற்றஞ்சாட்டி விசனம் வெளியிட்டனர்.

குறிப்பாக, இந்த சம்பவம் இடம்பெற்ற போது, பொலிஸார் கடமையில் இருந்திருக்கிறார்கள். வெள்ளப் பாதிப்பினால், மதரஸாவில் இருந்து வெளியேறுவதற்கு வழி இல்லாததன் காரணமாக, மதரஸா நிர்வாகம்



மாணவர்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி அனுப்பியிருக்கிறது.

இவ்வாறு அவர்கள் அந்தப் பாதையில் பயணித்த போது, வீதியில் வெள்ளம் பெருக்கு எடுத்திருந்த நிலையில், பொலிஸார் வீதியை மூடாமல், போக்குவரத்துக்கு அனுமதி அளித்தமை பொறுப்பற்ற செயற்பாடாகும். அவர்களை தடுத்து நிறுத்தி நிலைமையை விளக்கி இருக்கவேண்டும்.

அதுமட்டுமின்றி, சம்பவம் இடம்பெற்று சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு பிற்பாடு, கடற்படையினர் வருகை தந்து, அவர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

அதுவரைக்கும், பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக, அங்கிருந்தவர்கள் இரண்டு உயிர்களை முயற்சி செய்து காப்பாற்றி இருக்கிறார்கள். இதன்போது, அங்கிருந்த பொதுமக்கள், வெள்ளத்தில் சிக்குண்டவர்களை காப்பாற்றுமாறு பொலிஸாரிடம் கெஞ்சியபோது, பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள். பொலிஸ் நிலையத்திற்கு அவர்கள் சென்று, ஒரு மணித்தியாலம் வரை முறைப்பாட்டை செய்வதற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

ஒரு அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்கான துரித பாதுகாப்பு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடாது, இந்த மக்களை இவ்வாறு அங்குமிங்கும் செல்லுமாறு பணித்திருப்பது கவலை தருகிற விடயம்.

எனவே, இந்த சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணை ஒன்றை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் முன்னெடுக்க வேண்டும் என்று, இந்த உயர் சபையில் கோரிக்கை விடுக்கின்றேன் ” என்று கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்த சம்பவம் தொடர்பில் தேடிப்பார்த்து உரிய விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# எய்ட்ஸ் தினத்தையொட்டி விழிப்புணர்வு






■ நியாஸ் ஆதம்

சர்வதேச எய்ட்ஸ் தினத்தையொட்டி கல்முனை பிராந்திய பாலியல் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு ஏற்பாடு செய்த நடைபவனியும் விழிப்புணர்வு செயலமர்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் திங்கட்கிழமை (02) இடம்பெற்றது.

பிராந்திய பாலியல் எய்ட்ஸ் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல். ஜலால்டீனால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு “உரிமைப் பாதையில் செல்” எனும் தொனிப்பொருளில் வைத்திய அத்தியட்சகர்கள், பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள், பிராந்திய பிரிவு தலைவர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், மாவட்ட எய்ட்ஸ் குழு உறுப்பினர்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன், பிராந்திய பாலியல் எய்ட்ஸ் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.ஜலால்டீன், சம்மாந்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி ஆகியோர் விரிவுரை ஆற்றினர்.

சர்வதேச எய்ட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் 1ஆம் திகதி கடைபிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் எய்ட்ஸ் நோயைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், HIV யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கவும் அதனால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையிலும் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# திடீர் சுற்றி வளைப்பு ; 20 பேர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நடத்திய திடீர் சுற்றி வளைப்பு தேடுதலின் போது நான்கு பேர் கேரளா கஞ்சாவுடனும் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 250 லீற்றர் கசிப்புடன் 15 பேருமாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி, புதிய காத்தான்குடி, ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், தாழங்குடா, கல்லடி, நாவற்குடா உட்பட இடங்களிலேயே குறித்த சுற்றிவலைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (03) ஆஜர் படுத்தப்பட உள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# நேர கணிப்பாளர் மீது தாக்குதல்

■ க. அகரன்

அரச,தனியார் பேருந்து தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டமையால் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (03) காலை அமைதியின்மை ஏற்பட்டது.

வவுனியாவில் இருந்து கல்முனை நோக்கி புறப்படத் தயாராக இருந்த அரச மற்றும் தனியார் பேருந்து தரப்பினருக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்ப்பட்டுள்ளது. அரச பேருந்து புறப்படுகின்ற நேரம் தொடர்பில் குறித்த வாய்த்தர்க்கம் ஏற்ப்பட்டுள்ளது.

இதனால் பேருந்து நிலையப்பகுதியில் இரு தரப்பிற்கும்



இடையில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் நிலைமையை கட்டுப்படுத்தி யிருந்தனர்.

இதற்கிடையில் பேருந்து நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துச் சபையின் நேர கணிப்பாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கூறி அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், அரச பேருந்து ஒன்றும் தனியார் பேருந்தும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# விபத்தில் மனைவி பலி; கணவன் காயம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - பல்லம, அடம்மன பிரதேசத்தில் திங்கட்கிழமை (02) இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாதம்பை, தனிமெல்கம பகுதியைச் சேர்ந்த ஏ.இந்திரா (வயது 30) எனும் திருமணமான பெண் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த அவரது கணவர் (வயது 32) சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தம்பதியினர் ஆனமடுவ, ஊரியாவ பகுதியில் மரண வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, மாதம்பை பகுதியை நோக்கி மீண்டும் பயணித்துக் கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'மாற்றுத்திறனாளிகளின் தலைமை' உலகப் பொருளாகும்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம். ஊனமுற்றோர் என்ற சொல் அந்தச் சமூகத்திற்கு ஓர் அசாதாரண இயக்கத்தை உருவாக்குகிறது, எனவே மாற்றுத் திறனாளிகள் என்ற முத்திரை இப்போது அதற்குப் பயன்படுத்தப்படுகிறது. முத்திரை மாறினாலும் மனப்பான்மை மாறாததால், அவர்கள் இந்தச் சமூகத்தில் நித்திய ஊனமுற்றவர்கள்.

"நிலையான எதிர்காலத்திற்காக மாற்றுத்திறனாளிகளின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்துதல்" என்பதே இந்த ஆண்டு உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தின் கருப்பொருளாகும்.

2024 பொதுத் தேர்தலுக்கான தேசிய மக்கள் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதிவேட்டில் பார்வைக் குறைபாடுள்ள சுகத் வசந்த டி சில்வாவின் பெயரை உள்ளிடுவதன் மூலம் இந்த தலைப்பை நோக்கி இலங்கை ஒரு சிறந்த அடியை எடுத்துள்ளது.

இயலாமை இருந்தும் வாழ்க்கையை கைவிடாதவர் சுகத். வேறொரு தரப்பினர் இந்த கதியை எதிர்கொண்டிருந்தால் வீடு வீடாக ஏதோவொன்றை விற்கும் வாழ்க்கையாகி இருக்கும். அடுத்த நிலை யாசகம் செய்வார்கள். அங்குதான் இந்த நாட்டில் பார்வையற்ற சமூகத்தின் வாழ்க்கை நிலை உள்ளது. இது நல்ல நிலை.

உயர்தரத்தில் சித்தியடைந்த சுகத், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பிரவேசித்து முதல் வகுப்பில் சித்தியடைந்து தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த போதிலும் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இருப்பினும், அவர் தனது மக்களுக்காக தொடர்ந்து போராடினார். இன்று அவர் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார். தனது தேசியப்பட்டியலில் மாத்திரமல்ல பாராளுமன்றத்திலும் வித்தியாசமாக சிந்திக்கும் நபர்களையே அவர் பரிந்துரைத்தார். 'மாற்றுத்திறனாளிகளின் தலைமை' என்பது இன்றைய உலகப் பொருளாக இருக்கும் போது, அதற்கு நாமும் பங்களித்திருக்கிறோம் என்று சொல்லலாம்.

இலங்கையின் சனத்தொகையில் பதினாறு இலட்சத்திற்கும் அதிகமானோர் மாற்றுத்திறனாளிகள். மாற்றுத்திறனாளிகள் என்று நம்மை நாமே சொல்லிக்கொள்ளும் இந்த மாற்றுத்திறனாளிகளிடம் காட்டும் பாசத்தின் அளவு, மஞ்சள் கோட்டுடன் சாலையைக் கடப்பதற்கான, வீதியோரங்களில் நடப்பதற்காக, சில மாற்று ஏற்பாடுகள் உள்ளன. அரச, தனியார் நிறுவனங்களுக்குள் செல்வதற்காக சாய்வான வழி செய்யப்பட்டுள்ளது.

எனவே, மாணவ, மாணவியருக்கு பள்ளி முழுவதும் வகுப்பறைகள் திறக்கப்பட வேண்டும். பிரெய்லி போன்ற கல்வி ஊடகங்களுக்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பது என்பது சுமார் மூன்றாண்டுகளுக்கான குறுகிய காலப் பணியாகும். சிறப்பு கட்டணம் இருந்தால் அத்தகைய குழுவிற்கு எளிதாக பயிற்சி அளிக்க முடியும்.

1988 ஆகஸ்ட் 18, திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளில் 3 சதவீத இடஒதுக்கீடு செய்ய அனைத்து அமைச்சகங்கள், துறைகள் மற்றும் பெருநிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளது. அவை இலையில் சுருண்டு கிடக்கின்றன, ஆனால் பின்தொடர்தலில் செயல்படுத்தப்படவில்லை. தொழில்முறை பயிற்சிக்கான உயர் வாய்ப்புகளை உருவாக்கி, நாட்டின் நலனுக்காக திறம்பட பங்களிக்கும் வாய்ப்பை இந்த குழுவிற்கு வழங்க வேண்டும்.

நமது இயல்பையும், புதுமையையும் அவர்களிடத்தில் பொருத்திப் பார்க்கும் போது, அவர்களின் உலகம் மட்டுமல்ல, நம் உலகமும் மிகவும் அழகான வேறு பரிமாணத்திற்கு ஈர்க்கப்படும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் ஒங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும். தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வந்த உடன் பயங்கரவாத தடைச் சட்டத்தில் சிக்கிய அரசாங்கம்



எம்.எஸ். எம்.ஐயூப்

கடந்த செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தே. ம. ச.யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து இரண்டு சம்பவங்கள் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அறுகம்பை பிரதேசத்தில் இஸ்ரேலிய உல்லாச பிரயாணிகளுக்கு எதிராக கடந்த அக்டோபர் மாதம் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாகவும் கடந்த வாரம் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்ச்சிகளோடு புலிகளின் கொடிகள், படங்கள் மற்றும் அடையாளங்கள் ஆகியவற்றை சமூக வலைதளங்களில் பகிரவிட்டதாக கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாகவும் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தே.ம.ச.க்கு ஆதரவானவர்கள், எதிரானவர்கள் இந்த விஷயத்தை போட்டு அக்கட்சியை விமர்சிக்கின்றனர். அக்கட்சியை ஆதரித்த போதிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை கடுமையாக எதிர்ப்போரும் அச்சட்டத்தை எதிர்த்தாலும் எதிரிகாவிட்டாலும் இச்சம்பவங்களை பாவித்து அரச ஆதரவாளர்களை அசௌகரித்துக்கு உள்ளாக்க விரும்புவோரும் இவ்வாறு அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர்.

தே. ம. ச. யும் அதன் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியும் நீண்டகாலமாகவே அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து வந்துள்ளன. ம.வி. மு. யினர் அவர்களது முதலாவது கிளர்ச்சியின் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டு இருந்து 1977ஆம் ஆண்டிலேயே மீண்டும் பகிரங்க அரசியலில் ஈடுபட ஆரம்பித்தனர். எனவே 1979 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை

நிறைவேற்றிய போது கடும் அடக்குறையினால் வெகுவாக பாதிக்கப்பட்ட ஓர் அமைப்பு என்ற வகையில் ம.வி. மு. அதை எதிர்க்க நியாயமான காரணங்கள் இருந்தன.

உண்மையிலேயே பயங்கரவாதம் என்ற சொல் 1970 ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் அரசியல் இலக்கியத்தில் இருக்கவில்லை. 1953 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தால் போராட்டத்தின் போது சில இடதுசாரி தலைவர்கள் ஒரு நாள் எதிர்ப்பை காட்டுவது மட்டுமே தமது நோக்கமாக இருந்தது என்றும் அதற்கப்பால் போராட்டத்தை தொடர்வோர் பயங்கரவாதிகள் என்று கூறியதாக சில தகவல்கள் இருந்த போதிலும் அச்சொல் அச்செய்தியோடு மறைந்துவிட்டது.

ஆயினும், 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது ஆளும் கட்சியினர் இச்சொல்லை பரவலாக பயன்படுத்தினர். எனவே ம.வி. மு. யினர் அச்சொல்லை வெறுத்தனர். ம.வி. மு.யினர் 80களின் இறுதியில் நடைபெற்ற தமது இரண்டாவது கிளர்ச்சியை அடுத்து சில வருடங்களுக்குப் பின்னர் பகிரங்கமாகவே வன்முறை அரசியலை கைவிடுவதாக அறிவித்தனர்.

எனினும், அவர்கள் அதன் பின்னரும் பாராளுமன்ற அரசியலோடு நின்றுவிடவில்லை. வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அரச நிறுவனங்களை முற்றுகையிடுதல் போன்ற தொழிற்சங்க போராட்டங்களிலும் அவர்கள் ஈடுபட்டனர். இவற்றின் போது பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபடும் நிலையும் ஏற்படுவதுண்டு. எனவே, அவையும் பயங்கரவாதம் என்று அழைக்கப்படும் அபாயமும் ஏற்பட்டது.

அரகலய என்றழைக்கப்படும் 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் எழுச்சியையும் அப்போதைய ஆளும் கட்சியினர் பயங்கரவாதம் என்றே கூறினர். அவ்வெழுச்சியின் பயனாக பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க அதை பாசிசம் என்றும் அழைத்தார்.

ம.வி.மு.யினர் நாட்டு பிரிவினையை எதிர்த்த போதிலும் பிரிவினைவாதிகளை அடக்குவதற்காகவே கொண்டு வரப்பட்ட இச்சட்டத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தனர். பிற்காலத்தில் அரசாங்கங்கள் அச்சட்டதுக்கு பதிலாக சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு இணையான சட்டமொன்று கொண்டு வருவதாக கூறிய போதிலும் ம.வி.மு ஆரம்பத்தில் அச்சட்டத்தை முற்றாக இரத்துச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியது.

முந்தைய அரசாங்கங்களின் காலத்திலும் போரில் இறந்தவர்களுக்கான நினைவேந்தல்களோடு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். ஆயினும் ம.வி. மு தலைமை தாங்கும் அரசாங்கமொன்றின் கீழ் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவ்வாதறான கைதுகள் இடம்பெறும் போது அது அசாதாரணமாக முக்கியத்துவம் பெறுகிறது. அவர்கள் அச்சட்டத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தமையே அதற்குக் காரணமாகும்.

பயங்கரவாத தடைச் சட்டமானது மிகவும் மோசமான அடக்குமுறை சட்டமாகும். ஒரு சந்தேக நபரிடம் சித்திரவதை மூலம் பெறும் வாக்குமூலமும் அவருக்கு எதிராக சாட்சியாக உபயோகிக்க அச்சட்டம் இடமளிக்கிறது. அதில் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணமும் தெளிவான வரைவிலக்கணமும் அதில் இல்லை. இதனால் எந்த ஒரு செயலையும் பயங்கரவாதம் எனக் கூறி ஆட்களை கைது செய்ய பொலிஸார் முற்படும் அபாயம் அச்சட்டத்தில் இருக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவோரை வருடக் கணக்கில் தடுத்து வைக்கவும் அதிகாரிகளால் முடிகிறது. எனவே, எவ்வித குற்றச்சாட்டும் இல்லாமல் பல வருடங்களாக தமிழ் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 2021 ஆம் ஆண்டு சிறையில் அத்தமிழ் கைதிகளை சந்தித்துவிட்டு வந்த அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது வயதுக்கும் (35) மேலாக வழக்கின்றி சிறையில் சிலர் அடைக்கப்பட்டுள்ளனர் என்று பாராளுமன்றத்தில் கூறினார். ஆனால் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய அரசாங்கமும் அக்கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

பயங்கரவாத தடைச்சட்டமானது ஐ.நா. மனித உரிமை பேரவையாலும் தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளாலும் கண்டிக்கப்பட்ட சட்டமாகும். சர்வதேச நெருக்குதல் காரணமாக ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதாவது 2018 ஆம் ஆண்டு அச்சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Counter Terrorism Bill) என்ற பெயரில் சட்டமூலமொன்று வரையப்பட்டது. அதில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் இல்லாத சில செயல்களும் பயங்கரவாத குற்றங்களாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

எனவே, அது முந்தைய சட்டத்தைப் பார்க்கிலும் மோசமானது என்று தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூறின. ரணில் ஜனாதிபதியாக இருந்த கடந்த வருடம் பல அடக்குமுறைச் சட்டங்களை கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றோடு 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பயங்கரவாத விரோத சட்டம் (Anti-Terrorism Bill) என்ற பெயரில் கொண்டுவரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் எதிர்ப்புக்கள் காரணமாக அம்முயற்சிகள் பயனளிக்கவில்லை.

ஐரோப்பிய பாராளுமன்றம் இலங்கை விடயத்தில்2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி நிறைவேற்றிய பிரேரணை ஒன்றில் இச்சட்டத்தை மாற்றி அமைக்காவிட்டால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை இரத்துச் செய்ய நேரிடும் என்று சூசகமாக கூறப்பட்டிருந்தது. அதேவேளை ஐ.நா.மனித உரிமை பேரவையும் பல ஆண்டுகளாக இச்சட்டத்தை திருத்தி சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு இணையான சட்டமொன்றை கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரேரணைக்கு பயந்த கோட்டாபய அரசாங்கம் அதேமாதம் 21 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தை திருத்தவென அமைச்சரவை உபகுழுவை நியமித்தது. அத்தோடு சிறையிலிருந்த புலிகள் அமைப்பின் 16 முன்னாள் உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தார். அதன் பின்னர் ஜூன் மாதம் 25 ஆம் திகதி இவ்விவரங்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவிக்கப்பட்டது.

எனவே, கைதிகளை விடுதலை செய்தமையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுத்தமையும் நல்லெண்ண நடவடிக்கைகள் அல்ல ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரேரணையின் தாக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பது தெரிகிறது. சட்ட திருத்த நடவடிக்கைகள் பின்னர் கைவிடப்பட்டமை அதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இந்த விடயத்தில் தே.ம.சக்தி அரசாங்கம் இரண்டும் கெட்ட நிலையை எதிர்நோக்கி இருப்பதாக தெரிகிறது. புலிகள் அமைப்பின் கொடிகள் இலச்சினைகள் ஆகியவற்றை பாவிக்காமல் தமிழ் மக்கள் தமது உறவினர்களை நினைவு கூறுவதில் தவறில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. போரில் தமது உறவினர்கள் கொல்லப்பட்ட நாளில் தமிழ் மக்கள் அவர்களை நினைவுகூருவதற்கு மாறாக, வருடத்தில் புலிகளால் குறிக்கப்பட்ட இரண்டு நாட்களில் அதாவது மே மாதம் 19 ஆம் திகதியும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதியும் தான் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மே மாதம் 19 ஆம் திகதியானது பிரபாகரன் கொல்லப்பட்டதாக அறியப்பட்ட நாளாகும். நவம்பர் 27 ஆம் திகதியானது புலிகளின் முதலாவது மாவீரரான சங்கர் உயிரிழந்த நாளாகும். இந்நினைவேந்தல்களின் போது பலிகளின் இலச்சினைகளை மக்கள் காண்பிப்பது வழமையாகும். இது சட்டவிரோதமானது என்பதால் சம்பந்தப்பட்டவர்களை பொலிஸார் கைது செய்யலாம்.

இந்த விடயம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வரும் விடயமாகும். எனவே, அரசாங்கம் விரும்பாவிட்டாலும் தமக்கு பணிப்புரை வழங்கப்படும் வரை அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவோர். இதை நிறுத்துவதாக இருந்தால் அரசாங்கம் பொலிஸாரின் நடவடிக்கைகளில் தலையிட வேண்டும். அது தே.ம.ச எதிர்த்த கொள்கையாகும். கூடிய விரைவில் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது அல்லது அதற்குப் பதிலாக சர்வதேச தரத்திலான சட்டமொன்றை கொண்டு வருவதே இதற்குத் தீர்வாகும்.

## கடிதங்கள்

### நகரத்துக்குள் பேருந்துகள் வர வேண்டும்



முல்லைத்தீவு நகரத்திற்குள் பல பேருந்துகள் வருகை தருவதில்லை என பொது அமைப்புகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டின் பின்னர் புதிய பேருந்து நிலையம் மாவட்டச் செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு மாவட்டச் செயலாளரை சந்தித்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பணியினை தொடங்குகின்ற அனைத்து பேருந்துகளும் முல்லைத்தீவு நகரத்திற்குள் குறிப்பாக பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் வருகை தந்து ஐந்து நிமிடங்கள் கழித்து தமது பணியினை தொடங்குமாறு கோரிக்கை விடுத்தியிருந்தனர்.

மாவட்டச் செயலாளரும் வழங்கிய உத்தரவின் பேரில் ஒரு மாதம் அளவில் அனைத்து பேருந்துகளும் நகரத்துக்குள் சென்று திரும்பின. தற்போது கொக்குளாய் பயணிக்கும் பேருந்து மட்டுமே நகரத்திற்குள் சென்று திரும்புவதாகவும் ஏனைய பேருந்துகள் நகரத்திற்குள் செல்வதில்லை எனவும் பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு நகரத்தில் பெரும் சந்தை காணப்படுகின்றது. புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பழைய நகரத்திற்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்களை கொண்டு செல்வதற்கு முச்சக்கர வண்டிக்கு தனியாக பணம் செலவழிக்க வேண்டி உள்ளது.

நகரத்தில் இருந்து 500 மீற்றருக்கு அதிகமான துரம் பயணிகள் நடந்து வந்தே புதிய பேருந்து நிலையத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டி உள்ளது. இவ்விடயத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொது மக்களின் கோரிக்கையாகும்.

–நடராசா கிருஸ்ணகுமார்



# இரண்டாவது சூரியனாக மாறுகின்றதா பூமி?



நி.பானுஷா
யாழ் பல்கலைக்கழகம்
ஊடகக் கற்கைகள் துறை

**நீண்ட கால வெப்பமயமாதல் போக்குகள் மற்றும் தீவிர வானிலை மாற்றங்களின் அதிகரிப்பு ஆகியவை பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் பாதிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. குறைந்தபட்சம் 97% புவி வெப்பமடைதலிற்கு மனிதர்களின் செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன.**

புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் என்ற சொற்கள் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்பட்டாலும் அவை வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளன. காலநிலை மாற்றம் எனும் போது தட்பவெப்பநிலை, ஈரப்பதம், காற்று, மேக மூட்டம் மற்றும் மழைப்பொழிவு போன்றவற்றைப் பாதிக்கும்.

இது பூமியின் வானிலை முறைகளில் நீண்ட கால மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

புவி வெப்பமடைதல் என்பது மனித நடவடிக்கைகளால் முதன்மையாக புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதால் பூமியின் சராசரி மேற்பரப்பில் வெப்பநிலை அதிகரிப்பதைக் குறிக்கின்றது. மானுடவியல் காலநிலை மாற்றம் என்பது மனித நடவடிக்கைகளால் ஏற்படும் காலநிலை மாற்றங்களைக் குறிக்கின்றது, குறிப்பாக தொழில்மயமாக்கல் மற்றும் வளிமண்டலத்தை மாசுபடுத்தும் நடைமுறைகள் போன்றன உள்ளடங்கும்.

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) காலநிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழு (IPCC) மூலம், ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் காலநிலை மாற்றம், அதன் விளைவுகள் தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

2023 இல் அதன் ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் (AR6) இடைக்கால புதுப்பிப்பில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இருபத்தியோராம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களுக்கு இடையில் உலகளாவிய மேற்பரப்பு வெப்பநிலை 1.1 ° C (1.98 ° F) அதிகரித்துள்ளது என்று IPCC மதிப்பிட்டுள்ளது.

புயல்கள், வெள்ளம், வறட்சி மற்றும் காட்டுத்தீ ஆகியவற்றின் அதிகரித்த தன்மை மற்றும் தீவிரத்தன்மையுடன் காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதலை IPCC இணைத்துள்ளது. வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்தால் இதுபோன்ற பேரழிவுகள் மேலும் அதிகரிக்கும் என்றும் எச்சரித்துள்ளது.

உலகலாவிய ரீதியில் ஜூலை 2023 பூமியில் இதுவரை பதிவு செய்யப்படாத வெப்பமான மாதமாகும்.

காலநிலை மாற்றத்திற்கான முக்கிய காரணியாக- பூமியின் வளிமண்டலத்தில் பல வாயுக்கள் உள்ளன. அவை சூரியனில் இருந்து வெப்பத்தை சிக்கவைத்து வெப்பமானது விண்வெளியில் வெளியேறுவதைத் தடுக்கின்றன. இந்த நிகழ்வு கிரீன்ஹவுஸ் விளைவு என்றும், வாயுக்கள் பசுமை இல்ல வாயுக்கள் (GHGs) என்றும் அழைக்கப்படுகிறது.

இயற்கையில் உள்ள முக்கிய GHGகள் கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு ஆகும். கிரீன்ஹவுஸ் விளைவு இல்லாவிட்டால் பூமி உயிர்களை ஆதரிக்க முடியாத அளவுக்கு குளிர்ச்சியாக இருக்கும்.

காலப்போக்கில் பூமியின் வளிமண்டலத்தில் சிக்கியுள்ள GHG களின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது இதனால் உலகளாவிய வெப்பநிலை உயர்கிறது. பூமி வெப்பமடைவதனால் கடல்களில் அடிக்கடி சூறாவளி ஏற்படும், வெப்பநிலை அதிகரிக்கும். இதனால் சில பகுதிகள் அடிக்கடி வெப்ப அலைகளை அனுபவிக்க நேரிடலாம். அவை பேரழிவு தரும் வறட்சி மற்றும் காட்டுத்தீயைக் உருவாக்குகின்றன.

மேலும், தண்ணீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும், கடல் மட்டம் உயர்வதால் உலகளவில் பல கடலோரப் பகுதிகளும் கடுமையான வெள்ளத்தை எதிர்கொள்ளக்கூடும், வனவிலங்குகளிற்கு அச்சுறுத்தலாக அமையும், தாவரங்கள் அழிவடைந்து செல்வதோடு நிலங்கள் பாலைவனமாகும், காலநிலை நெருக்கடி உலகளாவிய ரீதியில் உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தும்.

இவ்வாறாக, மனிதத் தலையீட்டினாலும், இயற்கையினாலும் ஏற்படும் புவி வெப்பமடைதல் அதீத ஆபத்தை உண்டுபண்ணும் இருப்பினும், கணிசமான சான்றுகள் மற்றும் விஞ்ஞான சமூகத்தினரிடையே ஒருமித்த கருத்து இருந்தபோதிலும் மக்கள் சிலர் காலநிலை மாற்றத்தின் பின்னால் உள்ள அறிவியலுக்கு தொடர்ந்து சவால் விடுகின்றனர்.

இந்த விமர்சகர்கள் காலநிலை மாற்றத்தை ஒரு இயற்கையான நிகழ்வாக வகைப்படுத்துகிறார்கள் மற்றும் உலகளாவிய வெப்பநிலை உயருவதற்கு மனித செயல்பாடுகள் பங்களிப்புள்ளது என்பதை ஏற்க மறுக்கிறார்கள் இந்த நிலைப்பாடு காலநிலை மறுப்பு என்று குறிப்பிடப்படலாம் , மேலும் அறிவியல் ஒருமித்த கருத்தை நிராகரிப்பவர்கள் காலநிலை மறுப்பாளர்களாக கருதப்படுகிறார்கள்.

புதைபடிவ எரிபொருள் நிறுவனங்கள் பெரும்பாலும் அரசியல்வாதிகள், ஊடக பிரச்சாரங்கள் மற்றும் காலநிலை மறுப்பை ஊக்குவிக்கும் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதே அதன் பின்னாள் உள்ள காரணியாகும்.

இனிவரும், காலங்களிலாவது மக்கள் தங்களது அறியாமையைப் புரிந்து கொண்டு செயற்பட்டால் அழிவை நோக்கி நகரும் பூமியைக் காப்பாற்ற முடியும்.



# மெய்யழகன் திரைப்படம் தமிழ் சினிமாவின் குறிஞ்சிப்பூ



மகேஸ்வரன் கலைச்செல்வன்,
ஊடககற்கைகள்துறை,
யாழ் பல்கலைக்கழகம்




ஆழமும் தத்துவார்த்தமும் மிகுந்த கதைக் கருக்களைக் கையாள்வதற்கு, கதாபாத்திர வளர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு, கதாபாத்திரங்களின் ஆழ்மனதில் புதைந்துகிடக்கும் நினைவுகளைத் தூர் அள்ளிக் கழுவிக் கொள்வதற்கு, இழந்தவற்றைக் கதாபாத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு என, உரையாடலை முதன்மையான கதை சொல்லல் கருவியாகப் பயன்படுத்தும் இவ்வகைப் படங்கள், சினிமாவுக்கே உரித்தான காட்சி மொழியைச் சார்ந்திருப்பதிலும் சோடை போவதில்லை. ஆனால் நடிப்பில் சொத்தையாகி விடுவதுண்டு. அந்த வகையில் 'மெய்யழகன்' உரையாடல், காட்சி மொழி, நடிப்பு ஆகிய மூன்றின் வழி யாகவும் கதாபாத்திரங்களின் உணர்ச்சி ஆழத்தை முழுமையாகத் தொட்டு நிற்கும் தமிழ் சினிமாவின் குறிஞ்சிப்பூ.

சில நெருங்கிய உறவினர்களின் அன்பு பொய்யாகிப் போனதில் வாழ்ந்த வீட்டை இழந்து, ஊரை விட்டே ஸ்ரீ மாநகரத்துக்குக் குடிபெயர்ந்து போனவன், 20 ஆண்டுகளுக்குப் பின் அரை மனதுடன் சொந்த மண்ணுக்கு வருகிறான்.

இரத்த உறவுகள் உரு வாக்கிய கசப்பு, மனதளவில் அவனை இறுகிப்போனவனாக ஆக்கிவிடுகிறது.

அதேநேரம், ஊர் வாழ்க்கை தந்த அன்பின் ஊற்றை மட்டும் அப்படியே தக்க வைத்திருக்கிறான். மறந்தும் அந்தப் பொய்யான உறவினர்களின் கண்களில் பட்டுவிடாமல் போன வேலையை முடித்துக்கொண்டு உடனடியாக ஊர் திரும்பிவிட வேண்டும் என்று தவிக்கிறான்.

அப்போது அவனை வரவேற்று உபசரித்து, கலப்படமற்ற அன்பைப் பொழிகிறான், நினைவுகளை விட்டு அகன்றுபோன, பெயர் தெரியாத ஓர் உறவினன், முதலில் அவனிடமிருந்து விலகி ஓட நினைத்தவன், வழியின்றி ஓரிரவு அவனது வீட்டில் தங்கி உரை யாட நேரும்போது, நன்றி கலந்த அவனது பாசமும் கடந்த காலத்தில் மூதாதைகள் விட்டுச்சென்ற பண்பாட்டுத் தடங்களின் மீதும், வாழ் வதற்காகவே வாழ்க்கையை இழந்த சமகாலத்தின் சக மனிதர்கள் மீதும் அவன் கொண்டிருக்கும் பேரன்பும் கண்ணீரும், இவனது இழப்பின் வலியைத் துடைத்துப்போட்டு விடுகின்றன.

இவனது பெயரையும் உறவுமுறையையும் மறந்து விட்டோமே' எனக் குற்றவுணர்வால் துவண்டு துடித்தாலும் இழந்த வாழ்க்கையை உற்சாகமாக மீட்டெடுத்துக்கொள்ளும் மீட்சி பெற்ற ஒருவனாக மாறிப்போகிறான். இத்தனைக்கும், வலியின் வடுவை அவசியமற்றப் பெருஞ்சுமையாகச் சுமந்து திரிந்தவனைக் கடைத்தேற்ற வேண்டும் என்று அந்தப் பெயர் தெரியாத உறவினன் துளியும் முயலவில்லை. அவனது அன்பும் மனிதர்களின் மீதான பிடிமானமும் இறுகிப்போன இவனை 'நாம் இழந்தது எனப் பெரிதாக எதுவுமில்லை' என்கிற இலகுவான மனநிலைக்குக் கொண்டு வந்து நிறுத்துகின்றன. அதுமட்டுமல்ல, அவனை 20 வருடங்களுக்கு முந்தைய ஊர்க்காரனாக மாற்றியும் விடுகின்றன.

முதன்மை, துணைக் கதாபாத்திரங்களுக்கு இடையிலான 'உரையாடல்', வாழ்வின் யதார்த்தங்களையும் வாழ்வனுபவத்தின் சேமிப்புகளையும் தொட்டுக்கொண்டு வெளிவரும் இயல்பின் நதியாக வழிந்தோடுகிறது.

இழப்புகளை இழப்பாகக் கருதி ஓரிடத்தில் நின்றுவிடுவதிலிருந்து வாழ் வதற்கான ஆற்றலை, கடந்துபோதலும் மன்னித்தலும் மட்டும்தான் கொடுக்கும் என்பதை உணரும் அருள்மொழி கதாபாத்திரத்தில் வரும் அரவிந்த்சாமியின் வெகு இயல்பான நடிப்பு, முற்றிலும் முதல் முறை என்று கூறிவிடலாம்.

அதிலும், குற்ற வுணர்வுடன் புலரும் அதிகாலையில் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு அவர் ஓடும் காட்சி இன்னும் சில காலத்துக்கு நினைவிலிருந்து அகலப்போவதில்லை.

அந்தக் காட்சியில் காலணியை மாற்றிப் போட்டுக் கொண்டு வந்து, பின் அதை உதறியெறிந்துவிட்டு சில அடிகள் நடக்கும் அருள்மொழி, ஆற்றாமையுடன் திரும்ப ஓடிப்போய் அந்தக் காலணிகளை எடுத்து நெஞ்சில் அணைத்துக்கொள்வார்.

உரையாடலற்ற அந்தக் காட்சியை இயக்குநர் மகேந்திரன் உயிரோடு இருந்து பார்த்திருந்தால், பிரேம் குமாரைத் தேடிப்போய் கட்டி அணைத்துக் கொண்டாடியிருப்பார்.

அருள்மொழி தனது தங்கைக்கு வளையலும் மோதிரமும் கொலுசும் அணிவிக்கும் காட்சியில் உங்கள் கண்கள் உடைந்து பெருகுவதை எவ்வளவு முயன்றாலும் தடுத்துவிட முடியாது. இதை 'கிரிஞ்ச்' காட்சியாக உணரும் யாரும் இந்தப் படத்திலிருந்து எதையும் எடுத்துச் செல்ல முடியாது ஊரைக் கடந்து, உறவுகளை மறந்து, நினைவுகளை மட்டுமே மிச்சமாகக் கொண்டு மாநகர வாழ்க்கைக்குள் சிறைப்பட்டுப் போன பலரையும் அருள்மொழியாக உணரவைக்கும் 'கேரக்டர் ஐடெண்டிபிகேச'னை சாத்தியமாக்கிவிடுகிறது படம்.

அதே நேரம் மாநகரத்தின் அருள்மொழிகள் ஒருமுறை வேர்களைத் தேடிப் பயணப்பட்டால் மெய்யழகன்களாக தங்களை மீள் கண்டுபிடிப்பு செய்துகொள்ள முடியும் என்பதை நினைவூட்டு வதிலும்தான் இப்படம் எட்டமுடியாத உயரத்தில் ஜொலிக்கிறது.

மெய்யழகன் போன்ற மனிதர்கள் இருக்க முடியுமா என்கிற வியப்பிலிருந்து விலகி, அவனைப் போல்தான் நாம் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் என்கிற பேரன்பை நோக்கி பார்வையாளர்களை நகர்த்துகிறது கார்த்தியின் மண் மணக்கும் நடிப்பு.



# “பத்திரிகை: தகவலின் மாபெரும் சக்தி”

அ.அஸீஸ் அஸ்மா,
ஊடகக்கற்கை துறை,
இரண்டாம் வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்





இன்றைய இலங்கையில் செய்தி பத்திரிகைகள் மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் மிக முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. பத்திரிகைகள் என்பது அரசியல், பொருளாதார மற்றும் சமூக சூழல்களில் மக்கள் நேரடியாக இணையம் வழியாக செயல்படுகின்றன. இதன் மூலம், மக்களுக்கு உண்மையான தகவல்கள் மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுகின்றன.

எனவே, பத்திரிகை இன்றி, இலங்கையில் மக்களுக்கு ஆதரவற்ற மற்றும் குறைந்த பணி நிலவரங்களை சந்திக்க நேரிடும். இவ்வாறு, பத்திரிகையின் இன்றியமையாமை, நாட்டின் ஜனநாயக செயல்பாடுகளுக்கும், பொதுமக்களின் அறிவுரிமைகளுக்கும் பெரிதும் தாக்கம் விளைவிக்கின்றது. பத்திரிகை இல்லாமையின் விளைவுகளாக.

**அரசியல் பங்காளிகள் மற்றும் அவற்றின் எதிர்ப்பு:**

இலங்கையில், குறிப்பாக 1980களில் பத்திரிகைகள் தங்களின் சுதந்திரத்தை இழந்திருந்தன. அப்போது, ஆட்சியைச் சார்ந்த அதிகாரிகள் பத்திரிகைகள் மீது பல கட்டுப்பாடுகளை அமல்படுத்தினர். இதன் விளைவாக, மக்கள் உண்மையான தகவல்களை பெறுவதில் தடை ஏற்பட்டு, அரசியல் ஊடகங்கள் அரசு நோக்கங்களை பின்பற்றுவதாக விளங்கின.

**சமூக விவாதங்கள் மற்றும் கருத்துத் திருப்பங்கள்:**

பத்திரிகைகளின் இன்றியமையாமை, சமூகத்தின் உள்ளுணர்வை முடக்குவதற்கு வழிவகுக்கின்றது. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் மற்றும் பொதுவாக மக்களின் கருத்துகளை மையமாக்கி எந்தவொரு தகவலும் சரியாகப் பரப்பப்படாததனால், பல இடர்பாடுகள் ஏற்பட்டன. பத்திரிகைகளின் இல்லாமை, மக்களின் கருத்து வெளிப்பாட்டிற்கான வழிகளை மூடியுள்ளது.

**பொது நலன் குறைபாடுகள்:**

பத்திரிகைகள் மக்களுக்கு வாழ்க்கைத் திறன், பொருளாதாரம், கல்வி மற்றும் ஆரோக்கியம் போன்ற பல முக்கியமான பகுதிகளில் சரியான தகவல்களை வழங்குகிறது. பத்திரிகையின் இல்லாமை, மக்கள் பொதுமக்கள் சுருக்கமான மற்றும் தவறான தகவல்களை பெறுவதற்கும், முடிவில் மக்களின் வாழ்க்கைத் திறன் குறைந்து போகலாம். தற்கால இலங்கையில் பத்திரிகையின் நிலை இன்றைய இலங்கையில், பத்திரிகைகளின் நிலை முன்னேற்றத்தை அனுபவிக்கின்றது என்றாலும், அது இன்னும் சில சவால்களை சந்திக்கின்றது. இங்கே சில முக்கிய உதாரணங்களைப் பார்க்கலாம்:

**2019 ஆம் ஆண்டின் Easter Sunday தாக்குதல்:**

இந்த அக்கிரமமான தாக்குதல் நடைபெறும் முன்னர், பத்திரிகைகள் உண்மையான தகவல்களை மக்களிடமிருந்து

மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டது. அரசு பொதுவாக பத்திரிகைகள் மீது தடைகளை உருவாக்கியது, மேலும் தகவல்களை தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக, மக்கள் உண்மையான தகவல்களை அறியாமல், பயப்படுகின்றனர்.

**சமூக ஊடகங்களின் அதிகமான பயன்பாடு:**

இன்றைய சமூக ஊடகங்கள் செய்தி பரப்புவதை மிகவும் விரைவாக்கி இருக்கின்றன. ஆனால், இதில் பல தவறான மற்றும் பொய்யான தகவல்களும் பரவுகின்றன. இதன் மூலம், பத்திரிகைகளின் முன்னேற்றம் மிகவும் முக்கியமாக இருக்கிறது, ஏனென்றால் அது ஒரே நேரத்தில் துல்லியமான மற்றும் நம்பகமான தகவல்களை வழங்க முடிகிறது. உதாரணமாக, 2020ஆம் ஆண்டின் கோவிட்-19 தொற்று பரவியபோது, பத்திரிகைகள் சரியான மற்றும் அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்க உதவியும், சமூக ஊடகங்கள் தவறான தகவல்களுடன் மக்கள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தின.

**பத்திரிக்கையின் சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகள்:**

இலங்கையில் பத்திரிகைகள் தங்கள் சுதந்திரத்தை தக்கவைக்க கடுமையாக போராடுகின்றன. 2020ஆம் ஆண்டு, சில பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி சேனல்கள் அரசியலின் பாதிப்புகளை இழந்து, தங்கள் செய்திகளை வெளியிடுவதில் தடைகளை எதிர்கொண்டன. இது, ஜனநாயகத்தின் அடிப்படை உறுப்புகளான செய்தி பரப்புதல் மற்றும் மக்கள் கருத்து வெளியிடுதலுக்கு பதிலாக ஒரு முந்தைய கால சூழலை உருவாக்குகின்றது.

**பத்திரிகையின் அவசியம் அரசியல் விழிப்புணர்வு:**

பத்திரிகைகள், அரசியல் நிகழ்வுகளை மக்கள் முன்னிலைப்படுத்தி, அவர்களை அறிவுள்ளவராக மாற்றுகின்றன.

தகவல்களின் நம்பகத்தன்மை, சமூக மாற்றங்களில் முக்கிய பங்காற்றுகின்றது.

**அதிகப்படியான அறிமுகம்:**

இலங்கையில் மக்கள் பத்திரிகைகள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட செய்திகள் மற்றும் ஆலோசனைகள் மூலம் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த முடிகின்றனர். உதாரணமாக, இன்றைய கல்வி, மருத்துவம் மற்றும் பொருளாதார முறைகள் பற்றிய செய்திகள் மக்களுக்கு மிக முக்கியமாக இருக்கின்றன.

**இலங்கை மற்றும் உலகளாவிய இணைப்புகள்:**

பத்திரிகைகள் நமது நாட்டை உலகளாவிய சமூகவியலுடன் இணைக்கின்றன. இப்போது, உலகின் முக்கிய நகரங்களில் நடைபெறும் நிகழ்வுகளை எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது.

இலங்கையில் பத்திரிகையின் இன்றியமையாமை, மக்கள் அரசியல் மற்றும் சமூக முன்னேற்றங்களை சரியாக புரிந்து கொள்வதற்கான ஒரு மிகப்பெரிய தடையாக இருக்கிறது. பத்திரிகைகள் இன்றி, மக்களுக்கு தகவல்களின் துல்லியம், நேர்மை மற்றும் அடிப்படை உரிமைகள் குறைவடையும். எனவே, பத்திரிகைகளின் சுதந்திரம், சரியான தகவல்களுடன் மக்களை வழிகாட்டுவதற்கு அவசியம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

எனவேதான், உலகம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் என பல தொழில்நுட்ப உயர்நிலைகள் அடைந்தாலும் செய்தி பத்திரிகையின் இடத்தை ஈடு செய்ய முடியாது பத்திரிகையின் நம்பகத்தன்மையை உடைத்திட முடியாது. எனவேதான் தற்கால தொழில்நுட்பங்கள் ஒரு பக்கம் கையாள்வதுடன் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை கைவிடாது செயற்பட்டு வாசிக்கும் சமூகத்தை உருவாக்க வேண்டும்.



# லயத்து வாழ்க்கை



மு.நிமியா.
ஊடகக்கற்கைகள்
துறை,
யாழ்.
பல்கலைக்கழகம்



மலையகம் என்றதுமே வரிசையாக அமைந்த தேயிலைச் செடிகளுக்கு அடுத்து நினைவில் வருவது வரிசை லயன் வீடுகளே. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரினால் தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட தோட்ட தொழிலாளிகளுக்கென தொடர்வரிசை குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இந்த குடியிருப்புகள் “லயங்கள்” என்ற தனித்த பெயரில் அடையாளப்படுத்தபடுகிறது. இச்சொல் பற்றிய இருவிதமான விளக்கங்கள் இம் மக்களிடத்தில் மரபு வழியாக காணப்படுகிறது. தமிழிலில் இலக்கண விளக்கப்படி “லயம்” என்பது குதிரைகள் வசிக்கும் இடம் ஆகும். தென்னிந்தியாவிலிருந்து எம் மூத்த பரம்பரையினர் இங்கு வந்த போது ஆங்கிலேயர்களின் குதிரைகளைக் கட்டி வைத்திருந்த இடங்களையே அம்மக்களுக்கு இருப்பிடமாக மாற்றி கொடுத்தனர். அதனால் அவ்விடத்தை லயங்கள் என்கின்றனர்.

இரண்டாவதாக இந்த வாழ்விடங்கள் தொடர் வரிசையில் அமைந்துள்ளன. அதனால் அப்பகுதியை அடையாளப்படுத்த “LINE HOUSE” என்ற ஆங்கில பதத்தை ஆங்கிலேயர் பயன்படுத்தியதாகவும் காலப்போக்கி இதுவே மருவி லயன் என்ற பதமாக மாறியதாகவும் கூறப்படுகிறது.

இந்த லயன் வீடுகளின் அமைப்பானது ஒரு குடும்பத்திற்கு 10 அடி அறை என்ற ஒழுங்கில் அடுத்தடுத்து பல குடும்பங்களை ஒரே கட்டிட தொகுதியில் குடியமர்த்தும் முறையாகும். அடுத்த அடுத்த அறைகளுக்கு இடையில் ஒற்றை சுவரே காணப்படும்.

ஆரம்ப கால லயன் குடியிருப்புகளில் பல குடும்பத்தினருக்கு பொதுவான ஒரிரண்டு மலசலக்கூடங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. மின்சார வசதிகள் கிடையாது. இன்று முன்னேற அடியெடுத்துள்ள சமூகம் என்ற வகையில், அந்த லயன் வீடுகளில் சில வசதிகளை மக்கள் தமது உழைப்பில் மேம்படுத்தியுள்ளனர்.

ஆனால் ஒட்டுமொத்த மலையகமும் இன்னும் மாற்றம் காணவில்லை. பெரும்பாலான வீடுகள் மலையகத்தில் ஆங்கிலேயர் காலத்தில் நிறுவப்பட்ட அதே அமைப்பினையே இன்றும் கொண்டுள்ளன.

காலம்காலமாக மாற்றப்படாமல் உள்ள தகரங்களின் ஓட்டைகளை மறைக்க ஓராயிரம் கற்கள் தகரத்தில் இருக்கும். முறையான வடிகாலமைப்பு மற்றும் மலசலக்கூட வசதிகள் இங்கு கிடையாது. கூட்டுக்குடும்பமாக வாழ்வோருக்கான இடப்பற்றாக்குறை உள்ளது. நீர் வசதிகள் குறைவாக உள்ளன. நெருக்கமான இருப்பிடங்களினால் இங்கு அமைதியான வாழ்விற்கான சுதந்திரம்இல்லை.

அதிகரித்த சமூகப் பிரச்சினைகளுக்கு இதுவும் ஒரு காரணமாகவே உள்ளது. இவை மட்டுமா? , தீப்பற்றுதல், மண்சரிவு , சுவர் இடிந்து விழுதல் போன்ற பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பலர் வேறு வழியின்றி அதே இருப்பிடங்களில் வாழ்கிறார்கள்.

200 வருடங்கள் கடந்துவிட்டோம் இருப்பிடங்களில் மாற்றமில்லை. அன்று காட்டில் கற்குகைகளில் வாழ்ந்த ஆதிமனிதனுக்கு கிடைத்த மதிப்பு கூட இன்றைய மலையக மக்களுக்கு சில இடங்களில் கிடைப்பதில்லை. இதுப்பற்றி 56 வயதான தோட்டத்தொழிலாளி மா.அன்புமணி அவர்கள் கூறும் போது, “பலரால் நாங்கள் “லயத்துக்காட்டான்;” என மட்டம் தட்டப்படுகிறோம்.

ஆனால் ஒரு கேள்வியை அவர்களிடத்தில்கேட்க விரும்புகிறேன். சொகுசு சோப்பாக்களுடன் அடிப்படை வசதிகளை கொண்ட மாடி வீடுகளை கட்டித்தந்தால் வேண்டாம் என்றா சொல்கிறோம்.

லயன்வீட்டுல எங்களுக்கு இன்றுவரை வீட்டுஉரிமை கிடையாது. தோட்ட முதலாளிகளும் முகாமையாளர்களும் வீட்டை விட்டு வெளியே போக சொன்னால் பெரும் போராட்டமாக உள்ளது. வீட்டு பிரச்சினைனு பொலீசுக்கு போன பொலிஸார் கூட எஸ்டேட் மெனேஜரோட முடிச்சிடு வர சொல்லுறாங்க”என்கிறார்.

நாணயத்தின் இரு பக்கத்தை போல இருநூறு வருடம் எம் பரம்பரை வாழ்ந்த இடம் இது. ஓட்டை கூரைக்குள் ஓராயிரம் பிரச்சினை ஆனாலும் எங்களுக்குள் நாங்கள் ஒற்றுமையுடனும் ஒருங்கிணைந்த சமூக உறவுகளுடனும் வாழ்ந்து வருகிறோம் பல தலைமுறைகள் கடந்து வாழ்ந்த வீட்டிற்கு சொந்தம் கொண்டாட

முடியாத துர்பாக்கிய நிலை இனியும் வேண்டாம். பெருந்தோட்ட காணிகள் அரசுரிமை எனும் போதிலும்பெருந்தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ள கம்பனிகள் அந்த காணிகளின் சொத்துரிமையை அம்மக்களுக்கு முழுமையாக வழங்கவில்லை. இவை பற்றி குரலெழுப்பும் அதிகாரத்தில் உள்ள எம் மலையக பாராளுமன்ற பிரதிநிதிகளின் பொறுப்பின்மையும் எமது அவலங்களுக்கான அடித்தளங்களாகும்.

இன்றைய வாக்குரிமை மட்டும் கிடைக்காதிருந்தால் உயிருள்ள அடிமைகளாக மலையக சமூகம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. உணவு, நீர், உடை, உறையுள் என்பன மனிதனின் அத்தியாவசிய தேவையாகும் இதில் இருப்பிட பிரச்சினைக்கான குரல்கள் இன்னும் சத்தமாக எழ வேண்டும்.

சில அரசியல் தீர்மானங்களின் படி இருப்பிட பிரச்சினைக்கு வழங்கப்பட்ட தீர்வாக மலையகத்திற்கு கிடைத்த இந்திய வீடமைப்பு திட்டத்தினை குறிப்பிட முடியும். அது மலையக மக்களின் வாழ்விடத்தை மேம்படுத்தும் நோக்கில் 2016-2021 இற்கு இடைப்பட்ட காலத்தில் மத்திய மற்றும் ஊவா மாகாண பகுதிகளில் குறிப்பாக நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களின் தோட்டப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்த வீட்டு வசதி திட்டத்தின்கீழ் இலங்கையின் தேயிலைத்தோட்டப் பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டன.

குடிநீர், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகளுடன் அவை வழங்கப்படுவதாக கூறப்பட்டது. எனினும்பல தோட்டப்புறங்களில் மக்களினால் அவ்வீடுகளில் கட்டுமான பிழைகள் உள்ளதாகவும், வீடுகளில் விரிசல்கள் உள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க முதலாளிகள் தொழிலாளிகளை சுரண்டி உழைக்கும் காலம் இன்னும் மறையவில்லை. தோட்ட மேலதிகாரிக்கு சொகுசு பங்களா, அதற்கு பணிப்புரிய தோட்டத்தில் வேலை செய்யும் இளைஞர்கள் நால்வர். மேற்பார்வை செய்யும் சோம்பேறி உத்தயோகத்திற்கு இத்தனை சொகுசு. நாள் முழுவதும் அட்டை கடியிலும், பொசுக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் உழைக்கும் தொழிலாளிக்கு நிம்மதியாகபடுத்து உறங்க சொந்த வீடில்லை.

சுதந்திரம் அடைந்து 76 வருடங்கள் ஆனப் போதும் அந்நிய ஆட்சியின் அடையாளமாக இந்த குடியிருப்புகள் தொடக்கத்தில் கட்டப்பட்டவாரே பல பகுதிகளிலும் உள்ளன.

இந்நிலையில் தோட்டப்புற இளைஞர் யுவதிகளின் ஒருமித்த வேண்டுகோளாக, “இலவசம் என எங்களுக்கு எதுவும் தேவையில்லை. இருக்கும் வீட்டிற்கான காணியுரிமையை கொடுங்கள் , வீட்டை

சீரமைக்கும் போது இடையூறு விளைவிக்கும் நிலையை தோட்ட கம்பனிகள் செய்ய வேண்டாம்.

நாட்டின் பிரஜைகள் என்ற அடையாளத்தை வைத்து ஏனையோருக்கு சரிக்கு சமன் வரியை கேட்கிறீர்கள். முதலாளிகளுக்கு குத்தகைக்கு கொடுக்கும் நாட்டின் சொத்தாக எம் சமூகம் உள்ளது. எங்கள் சேவை உங்கள் அந்நிய செலாவாணிக்கு தேவை,

எங்களில் ஒருவர் என கூறி பாராளுமன்ற ஆசனம் பெற எங்கள் வாக்குரிமை தேவை. ஆனால் எங்களின் தேவைகள் அரசாங்கத்தின் கண்களுக்கு தெரியவில்லையா? உண்மையில் நடப்பது இதுதான், அரசு கம்பனியை கைக்காட்டும், கம்பனி அரசை கைக்காட்டும், நடுவில் அரசியல்வாதிகள் மேடையில் நிற்று கைக்காட்டி விட்டு கூட்டு ஒப்பந்தங்கள் என்ற பெயரில் எங்களை அடகு வைப்பார்கள்.” நாட்டின் முதுகெலும்பாக திகழும் அம்மக்களின் தேவைகளுக்கு செவிசாய்ப்பது உரிய தரப்பின் பொறுப்பாகும்.

# “முயற்சியும் தியாகமும் வெற்றிக்கு முக்கியம்”

களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் நுவரெலியா பீட்று தோட்டம், தேயிலை தொழிற்சாலை, Tea Centre என்பன தினந்தோறும் உல்லாசப் பயணிகள் வருகை தரும் இடமாக உள்ளது. இதில் பொறுப்பான பதவியில் உள்ள திருமதி. சிவகவி கலைவாணி தான் அடைந்துள்ள வெற்றி குறித்து எமக்கு கூறினார். அதனை கேள்வி பதில் வடிவத்தில் தருகின்றோம்



‘எனது முன்னோர்கள் இந்தியாவிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் உழைப்பதற்காக இங்கு வந்தார்கள். நான் அந்த தொழிலை பின்தொடராமல் வேறு தொழிலை இலக்காகக் கொண்டு எனது கல்வியைத் தொடர்ந்தேன். இன்று எனது முன்னோர்களும் பெற்றோர்களும் பணியாற்றிய தோட்டத்தில் இப்போது பொறுப்பான ஒரு பதவியில் இருக்கின்றேன்’ இதற்கு எனது முயற்சியும் பெற்றோரின் தியாகங்களும் நான் தற்போது கடமையாற்றும் தோட்ட முகாமைத்துவத்தின் ஊக்குவிப்புமே காரணம்’ என நுவரெலியா பீட்று தோட்டத்தின் தேநீர் நிலைய உத்தியோகத்தராகவும் உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டியாகவும் விளங்கும் சிவகவி கலைவாணி தெரிவிக்கின்றார்.

தேயிலை பதனிடம் மற்றும் அரைத்தல் செயற்பாடுகள், அழகிய இயற்கை சூழலில் அமைந்த தேயிலைத் தோட்டம் ஆகியவற்றை சுற்றி காட்டி அதன் வரலாற்றை எடுத்துக் கூறும் பணிகள் மாத்திரமின்றி, பாரம்பரிய சிலோன் டீ வர்த்தக நாமத்தை உலகெங்கும் கொண்டு சென்ற நுவரெலியா பிரதேச தேநீரை சுவைத்துப் பருகும் இடமாக விளங்கும் பீட்று தேநீர் விருந்தக நிலையத்தின் (Tea Centre) உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகிறார் கலைவாணி.

உயர்தரம் கற்ற சில பெண்கள் தோட்டங்களை விட்டு தலைநகர் சென்று உழைத்து வரும் நிலையில் தான் வாழ்ந்த தோட்டத்தில் எவ்வாறு வருமானம் தரும் ஒரு நிரந்தர தொழிலைப் பெற்றுக் கொண்டேன் என தனது அனுபவங்களை இங்கு அவர் பகிர்ந்து கொள்கிறார்.

**கே: உங்களது முன்னோர்கள் மற்றும் உங்களது குடும்பத்தைப் பற்றி கூற முடியுமா?**

எனது பெற்றோர்கள் இதே தோட்டத்தில் தொழிலாளர்களாக பணியாற்றியவர்கள். அவர்களின் பெற்றோர்களும் இவ்வாறு இந்தத் தோட்டத்துக்கு வந்தவர்கள். எனது குடும்பத்தில் ஆறு பேர். நான் ஐந்தாவது பிள்ளை. நான் வேறு தொழிலை இலக்கு வைத்து படித்தேன்.

**கே: உங்களது பாடசாலைக் கல்வி மற்றும் உயர்கல்வி தொடர்பாக கூற முடியுமா?**

நுவரெலியா புனித திரித்துவ கல்லூரியில் உயர்தரம் வரை கற்றேன். கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பிக்கும் அளவுக்கு உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றேன். ஆசிரிய தொழிலுக்கு விண்ணப்பிக்கும் காலம் வரை ஏதாவது கற்கலாம் என யோசித்தேன்.

எனது நண்பர்களின் ஆலோசனைக்கு அமைய நுவரெலியா காமினி திசாநாயக்க தொழில்நுட்ப தொழிற்கல்வி நிலையத்தில் கணணியும் ஆங்கிலமும் கற்றேன்.

**கே: இந்த பயிற்சியை தொடர்ந்து உங்களது தொழில் சார்ந்த வாழ்க்கையைப் பற்றி கூறமுடியுமா?**

ஒரு வருட பயிற்சி நெறியின் பின்னர் அடுத்த கட்டத்துக்கு ஆயத்தமாகையில் எமது தோட்டத்தில் டீ சென்டரில் வேலை வாய்ப்பு இருப்பதாக தந்தை மூலம் அறிந்தேன். உயர்தரம் மற்றும் மேலதிக கணினி, ஆங்கில தகைமை சான்றிதழ்களுடன் நேர் முகத்தேர்வுக்குச் சென்றேன். என்னை தோட்ட முகாமைத்துவம் தெரிவு செய்தது.

எனக்கு சுமார் ஆறு மாத காலம் மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டன. தலைநகரிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தோட்ட முகாமையாளரிலிருந்து தொழிற்சாலை அதிகாரி வரை அனைவரும் எனக்கு பல நுணுக்கங்களை கற்றுக் கொடுத்தனர்.

**கே: உங்களது தொழில் அனுபவத்தைப் பற்றி கூறமுடியுமா?**

இப்போது 20 வருடங்கள் இந்த நிலையத்தில் உத்தியோகத்தராக எந்த வித இடையூறுகளும் இல்லாது பணிபுரிகிறேன். நிறைவான ஊதியம், உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் குடியிருப்பு, நான் பிறந்து வளர்ந்த மண், எனது குடும்பத்தினருடன் மிகவும் மகிழ்ச்சியான சூழலை அனுபவிக்கின்றேன்.

**கே: உங்கள் உயர்தரக் கல்வி மற்றும் ஆங்கில பயிற்சி சான்றிதழ் இருந்தாலும் உங்களது தொழிலை சிறப்பாக செய்ய உங்களுக்கு கிடைத்த வழிகாட்டுதல்கள் என்ன?**

உயர்தரக் கல்வி மற்றும் ஆங்கில பயிற்சி சான்றிதழ் பெற்றாலும் ஆரம்பத்தில் ஓரளவுக்கே ஆங்கிலம் பேச முடிந்தது. ஆனால் பயம் இருக்கவில்லை. பணியில் இணைந்ததும் எனக்கு ஆங்கில உரையாடல்கள் பற்றி பயிற்சி வழங்கினர். நான் ஆர்வமாக கற்றுக்கொண்டேன்.

**கே: இந்த வழிகாட்டுதல்கள் எப்படி உங்களுக்கு பிரயோசனமாக இருந்தது என்று கூற முடியுமா?**

இப்போது எந்த நாட்டிலிருந்து உல்லாசப் பயணிகள் வந்தாலும் அவர்களை வரவேற்று உபசரிப்பது மாத்திரமின்றி எமது தோட்டம் மற்றும் தொழிற்சாலையை சுற்றி காட்டும் வழிகாட்டியாகவும் பணி புரிவதற்கும் மிகவும் உதவியாக இருக்கிறது. மும்மொழி அறிவு என்னை இந்தளவுக்கு உயர்த்தியுள்ளது என்பேன்.

**கே: உங்களைப் போன்று பெருந்தோட்டத்தில் உள்ள பெண்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

சரியான வழிகாட்டல்கள் இருந்தால் பெண்கள் தமது பிரதேசத்தில் கௌரவமான தொழில்களை தேடிப் பெறலாம். அதற்கு நான் ஒரு உதாரணம்.

எனது கணவர் காய்கறி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார். ஒரு குழந்தை உள்ளது. பிள்ளையை எனது தாயார் பராமரிப்பில் விட்டு பணிக்கு வருகிறேன். எனது சகோதரர் ஒருவர் ஆசிரியராக இருக்கின்றார். சகோதரிகள் திருமணம் முடித்து சென்று விட்டனர். எமது தோட்டத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள் மாத்திரமின்றி பல்கலைக்கழக மாணவர்கள் , விரிவுரையாளர்கள், துறை சார்ந்தோர் என்னிடம் மிகவும் சிநேகபூர்வமான உரையாடி எனது கதையை கேட்டு என்னை பாராட்டிச் செல்வர். நான் கூடுதலாக என்னைப் பற்றி பெருமை பட விரும்பவில்லை. அடிப்படை கல்வியும் முயற்சியும் நேர்மையும் இருந்தால் நீங்கள் வாழ்க்கையில் முன்னேறலாம்.



# அமைச்சரவை முடிவுகள் சில...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களில் சில

## 77 ஆவது சுதந்திரதின வைபவம்

2025.02.04 அன்று 77 ஆவது சுதந்திரதின வைபவத்தை நடாத்துதல் மற்றும் அதன் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்குரிய வழிகாட்டல்கள், நெறிப்படுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக்கு ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சரவைக் குழுவொன்றை நியமிப்பதற்கு 2024.10.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள குறித்த விடயதான அமைச்சர்களை உள்ளடக்கியதாக 2025 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி 77 ஆவது சுதந்திரதின வைபவத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் தேவையான வழிகாட்டல்களுக்காக ஜனாதிபதியின் தலைமையிலும் மற்றும் பிரதமரின் பங்கேற்புடன் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யேபசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## குறைநிரப்பு வரவு–செலவுத்திட்டம்

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டு கொடுகடன் நிதியிடல் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருசில கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டுக் கொடுகடன் வழங்கல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததுடன், வெளிநாட்டுக் கொடுகடன் நிதியிடலின் கீழ் வழங்கிய நிதியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு இயலுமை கிட்டவில்லை. அத்துடன், மூலப்பொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளமையால், உள்நாட்டு நிதியிடல் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் பாரியளவில் அதிகரித்துள்ளன. இதன் விளைவாக ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவுறுதிச் சிட்டைகளை ஈடுசெய்வதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதாக இன்மையால் சிக்கலான நிலைமை தோன்றியுள்ளது.

இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு குறைநிரப்பு மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

## மருத்துவ விநியோகத்திற்கான பெறுகை

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மற்றும் மருந்து விநியோகங்கள் தொடர்ந்து வரும் ஒரு ஆண்டுக்கு அடையாளங் காணப்பட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்வதற்கு 2024.10.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்கள், சுகாதார அமைச்சுடன் உற்பத்திக்குப் பின்னரான கொள்வனவு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் தற்போது ஒப்பந்தத்தை மேற்கொண்டிராத உள்நாட்டு உற்பத்தியாளர்கள் விநியோகிக்கக்கூடிய மருந்து வகைகளின் 04 பட்டியல்கள் சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த 04 பட்டியல்களையும் பரிசீலித்து அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில், கீழ்க்காணும் வகையில் பெறுகைகளை வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர் , சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

42 வகையான மருந்துகளை விநியோகிப்பதற்காக பெறுகை 5, 398.83 மில்லியன் ரூபாய்களுக்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கும்

131 வகையான மருந்துகளை விநியோகிப்பதற்காக 16, 611.42 மில்லியன் ரூபாய்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கூட்டு வியாபார ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கும்

36 வகையான மருந்துகளை விநியோகிப்பதற்காக பெறுகை 9,022.10 மில்லியன் ரூபாய்கள் சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சுடன் உற்பத்திக்கு பின்னரான கொள்வனவு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கும்

130 மருந்து வகைகளை விநியோகிப்பதற்கு 13, 374.65 மில்லியன் ரூபாய்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 24 உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதற்கும்

## மேலதிக செயலாளர் பதவிக்கான நியமனம்

பிரதமர் அலுவலகத்தில் தற்போது நிலவுகின்ற 02 மேலதிக செயலாளர் பதவி வெற்றிடங்களுக்குக் கீழ்வரும் வகையில் நியமனங்களை வழங்குவதற்காக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது குருநாகல் மாவட்டச் செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலாளராகப் பணிபுரிகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான திரு. ஜே.எம்.ஐ.ஆர்.கே.ஜயசுந்தரவை பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் பதவிக்கு நியமித்தல்

தற்போது நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பணிபுரிகின்ற இலங்கை திட்டமிடல் சேவையின் அதிகாரியாக திருமதி. சாந்தனீ சாகரிகா போகஹவத்தவை பிரதமர் அலுவலகத்தின் மேலதிக் செயலாளர் பதவிக்கு நியமித்தல்

## கண்டி மாவட்டத்துக்கு அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தல்

கண்டி நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் பதவி 2024.11.25 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடமாகவுள்ளது. குறித்த பதவிக்கு தற்போது அம்பாறை பிரதேச செயலகத்தில் பணிபுரிகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான திரு. யூ.பீ. இந்திக அநுருத்த பியதாச அவர்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நியமிப்பதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## எதிர்கட்சித் தலைவரின் செயலாளர் பதவிக்கான நியமனம்

பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவரின் செயலாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக தற்போது பணிபுரிந்து வருகின்ற இலங்கை நிர்வாக சேவை ஐ ஆம் தர அதிகாரியான

எம்.ஜீ.சீ.எஸ்.ரணசிங்க அவர்களை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவரின் செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்காக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பட்டதாரிகளுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளங்காணல் மற்றும் தீர்வுகாணல்

1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை 07 சந்தர்ப்பங்களில் பல்வேறு முன்மொழிவுகள் மூலம் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளின் கீழ் 150,000 இற்கும் அதிகமானவர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் திறன் மற்றும் தொழிற் தகைமைகள் தொடர்பான சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆரம்ப உள்ளகப் பயிற்சிகள் சரியான வகையில் வழங்கப்படாமையாலும், முறைசார்ந்த வகையில் அப்பதவிகளுக்குரிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படாமையாலும் குறித்த அலுவலர்களுக்கு எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையை அடைவதற்கு இயலாமல் போயுள்ளது. அத்துடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 15,800 இற்கும் அதிகமானவர்கள் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக தற்போது பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

அதற்கமைய, அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிர்வாக நடவடிக்கைகளிலும், செயலாற்றுகை தொடர்hகவும் தற்போது மேலெழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளை அடையாளங்கண்டு, அப்பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து அதற்கான நிலைபேறான தீர்வுகளை முன்வைப்பதற்காக பிரதமர் தலைமையிலான கீழ்க்காணும் அமைச்சர்கள்/பிரதி அமைச்சர்களுடன் கூடிய அமைச்சரவைக் குழுவொன்றை நியமிப்பதற்கும், குறித்த குழுவுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கும் பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ஏற்பாடுகளை வகுத்தல்

2023 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குத் திட்டமிட்டிருந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலில் பொறுப்பேற்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களை மீளப் பெறல் மற்றும் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கான ஏற்பாடுகளை வகுப்பதற்காக உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு 2024.09.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 2024.11.25 அன்று பாராளுமன்றத்தில் சபாநாயகர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் 2023 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்களை இரத்துச் செய்து புதிய நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு தொடர்ந்த வரும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட வேண்டுமென உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, அனைத்து வாக்காளர்களின் வாக்குரிமை மற்றும் இளைஞர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்காக தற்போது பொறுப்பேற்கப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுப் பத்திரங்களை மீளப் பெறுவதற்கும், புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்குமான ஏற்பாடுகளை வகுத்துக் கொள்ளக்கூடிய வகையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கும் வகையில் உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


அமெரிக்கா

ஹமாஸுக்கு

# கெடு விதித்தார் ட்ரம்ப்

பணய கைதிகளை விடுதலை செய்யவில்லையென்றால், நரக விலை கொடுக்க நேரிடும் என்று, ஹமாஸுக்கு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கெடு விதித்துள்ளார்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர், கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இந்தப் பணய கைதிகளாக உள்ளவர்களில் அமெரிக்காவை சேர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றனர்.



பணய கைதிகளில் பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியானது.

ஹமாஸ் வசம் உள்ள பணய கைதிகளை மீட்க இஸ்ரேல் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. பணய கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமானால் காசாவில் போரை நிறுத்த வேண்டுமென இஸ்ரேலுக்கு ஹமாஸ் ஆயுதக்குழு நிபந்தனை விதித்துள்ளது.

ஆனால், ஹமாஸ் ஆயுதக்குழுவை முழுமையாக அழித்து, பணய கைதிகளை மீட்கும்வரை போரை நிறுத்தப்போவதில்லை என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ‘நான் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள ஜனவரி 20ஆம் திகதிக்கு முன்பு பணய கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பணய கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்றால் அதற்கு காரணமானவர்கள் (ஹமாஸ் ஆயுதக்குழு) மீது, அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு கடுமையான தாக்குதல் நடத்தப்படும்” என்று, டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்

அமெரிக்கா

# மகனுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய பைடன்

அமெரிக்க ஜனாதிபதி பைடன், தனது மகனுக்கு குற்ற வழக்குகளில் இருந்து பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மகன் ஹண்டர் பைடன் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. வரி செலுத்துவதில் முறைகேடு செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் ஹண்டர் பைடன் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இந்த வழக்கின் தண்டனை தொடர்பான விசாரணை வரும் 16ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் ஹண்டர் பைடனுக்கு அதிகபட்சமாக 17 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம்.

அதேவேளை, சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாகவும், துப்பாக்கி வைத்திருக்க அனுமதிபெற தேவைப்படும் விண்ணப்பத்தில் பொய்யான விவரத்தை தெரிவித்ததாகவும் ஹண்டர் பைடன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

போதைக்கு அடிமையான ஹண்டர் பைடன், தான் போதைக்கு அடிமையானவன் அல்ல என்று துப்பாக்கி தொடர்பான விண்ணப்பத்தில் போலி தகவல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பதிவு



செய்யப்பட்ட வழக்கில், ஹண்டர் பைடன் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் ஹண்டருக்கு குறைந்தபட்சம் 16 மாதங்கள் முதல் அதிகபட்சம் 25 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம்.

இதனிடையே, அமெரிக்காவில் குற்ற வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட நபர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி பலருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது வழக்கம்.

இந்நிலையில், குற்ற வழக்குகளில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள தனது மகனான ஹண்டர் பைடனுக்கு, ஜனாதிபதி ஜோ பைடன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்தது ஆகிய 2 வழக்குகளில் இருந்தும் ஹண்டர் பைடனுக்கு ஜனாதிபதி ஜோ பைடன் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார். இதன் மூலம் இந்த வழக்குகளில் தண்டனை அறிவிக்கப்பட்டாலும் ஹண்டர் பைடன் சிறை செல்லமாட்டார் என்பது உறுதியாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்டு டிரம்ப் வெற்றிபெற்றுள்ள நிலையில் அவர் அடுத்த மாதம் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். அதற்கு முன்பாக தற்போதைய ஜனாதிபதி பைடன், தனது ஆட்சியின் இறுதி கட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரளா

# விபத்தில் 5 மாணவர்கள் பலி


கொச்சி நோக்கி சென்ற கார் ஒன்று, பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில், 5 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கேரள மாநிலம், ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரியை சேர்ந்த 11 மாணவர்கள், காரில், திங்கட்கிழமை (2) இரவு, கொச்சி நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

இதன்போது, காலர்கோடு அருகே உள்ள வீதியில், வேகமாக சென்ற கார் எதிரே வந்த பஸ் ஒன்றுடன் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் காரில் பயணித்த மருத்துவ மாணவர்கள் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், சிலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்த மாணவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்கு



கொண்டு சென்றனர். அதில், சிகிச்சைக்கு செல்லும் வழியில் மேலும் 2 மாணவர்கள் உயிரிழந்தனர்.

மேலும், காரில் பயணித்த மருத்துவ மாணவர் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

மழை பெய்துகொண்டிருந்தபோது காரை வேகமாக இயக்கியதுடன், மற்றொரு வாகனத்தை முந்தி செல்ல முயன்றபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே வந்த பஸ் மீது மோதியதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் பங்களாதேஷ் மேற்கிந்தியத்

தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் பங்களாதேஷ் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் வென்ற நிலையில், ஜமைக்காவில் சனிக்கிழமை (30) ஆரம்பித்த இப்போட்டியின் மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் நஹிட் ரானா (4), தஸ்கின் அஹ்மட், தஜியுல் இஸ்லாம், ஹஸன் மஹ்மூட் (2), அணித்தலைவர் மெஹிடி ஹஸன் மிராஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் கேசி கார்ட்டி 40, அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட் 39 ஓட்டங்களைப் பெற்றனர்.



இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ஜாகிர் அலி 29 ஓட்டங்களுடனும், தஜியுல் இஸ்லாம் ஒன்பது ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக ஷட்மன் இஸ்லாம் 46, மெஹிடி ஹஸன் 42, ஷடாட் ஹொஸைன் 28, லிட்டன் தாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஷாமர் ஜோசப் 2 மற்றும் ஜஸ்டின் கிறேவ்ஸ், அல்ஸாரி ஜோசப், ஜேடன் சியல்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

# ஒருநாள் தொடரில் ஹிரிடோய் இல்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பங்களாதேஷின் குழாமில் அடிவயிற்றுக் காயம் காரணமாக துடுப்பாட்டவீரர் தௌஹிட் ஹிரிடோய் இடம்பெறவில்லை.

இதேவேளை தனிப்பட்ட காரணங்களுக்காக இத்தொடரில் முஸ்தபிசூர் ரஹ்மான் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் துடுப்பாட்டவீரர் அஃபிஃப் ஹொஸைன் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

குழாம்: மெஹிடி ஹஸன் மிராஸ் (அணித்தலைவர்), லிட்டன் தாஸ் (விக்கெட் காப்பாளர்), தன்ஸிட் ஹஸன், சௌமியா சர்கார், பர்வேஸ் ஹொஸைன், மகமதுல்லா, ஜாகிர் அலி, அஃபிஃப் ஹொஸைன், ரிஷாட் ஹொஸைன், நசும் அஹ்மட், தஸ்கின் அஹ்மட், ஹஸன் மஹ்மூட், ஷொரிஃபுல் இஸ்லாம், தன்ஸிம் ஹஸன், நஹிட் ரானா.

பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் தொடருக்கான


# மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் புதுமுகவீரர்

பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் விக்கெட் காப்பு துடுப்பாட்டவீரர் அமிர் யங்கூ இடம்பெற்றுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் குழாமில் யங்கூ இடம்பெறுவது இதுவே முதற்தடவை என்பதோடு, ஜஸ்டின் கிறேவ்ஸும் குழாமுக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர், ஜுவெல் அன்ட்றூ ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: ஷே ஹோப் (அணித்தலைவர்), பிரெண்டன் கிங் (உப அணித்தலைவர்), கேசி கார்ட்டி, றொஸ்டன் சேஸ், மத்தியூ போர்ட், ஜஸ்டின் கிறேவ்ஸ், ஷிம்ரோன் ஹெட்மயர், அமிர் யங்கூ (விக்கெட் காப்பாளர்), அல்ஸாரி ஜோசப், ஷாமர் ஜோசப், எவின் லூயிஸ், குடகேஷ் மோட்டி, ஷெர்ஃபேன் ருதஃபோர்ட், ஜேடன் சியல்ஸ், றொமாரியோ ஷெப்பர்ட்.



இத்தாலிய சீரி ஏ தொடர்

# றோமாவை வென்ற அத்லாண்டா



இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், றோமாவின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா வென்றது.

அத்லாண்டா சார்பாக மார்டென் டீ ரூன், நிகொலோ ஸனியோலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 04, டிசெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.